## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, பாராளுமன்ற ஓய்வூதியம் (திருத்தச்) சட்டம்

---

*[1990 திசெம்பர் மாதம் 19 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1990 திசெம்பர் மாதம் 21 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

**கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.**

**விலை: சதம் 75** **தபாற்செலவு: ரூபா 1.00**

# 1990 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, பாராளுமன்ற ஓய்வூதியம் (திருத்தச்) சட்டம்

[1990 திசெம்பர் மாதம் 19 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

38/89
ச. வ.—ஓ— — —
2030

## 1977 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்ற ஓய்வூதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, பாராளுமன்ற ஓய்வூதியம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப் பின்னர் 'முதன்மைச் சட்டவாக்கம்' என குறிப்பீடு செய்யப்படும்) 1977 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்ற ஓய்வூதியச் சட்டத்தின் விரிவுப் பெயர் "குறிப்பிட்டவொரு காலப்பகுதிக்குச் சட்டமன்றில் சேவையாற்றியுள்ள உறுப்பினர்களுக்கும் அவர்களது விதவைகளுக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குறிப்பிட்டவொரு காலப்பகுதிக்குச் சட்டமன்றில் சேவையாற்றியுள்ள உறுப்பினர்களுக்கும் அவர்களது விதவைகளுக்கும் பிள்ளைகளுக்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

1977 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு, "சட்டமன்ற உறுப்பினர்களாக இல்லாதொழிந்த ஆட்களுக்கும் அத்தகைய ஆட்களின் விதவைகளுக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சட்டமன்ற உறுப்பினர்களாக இல்லாதொழிந்த ஆட்களுக்கும் அத்தகைய ஆட்களின் விதவைகளுக்கும் பிள்ளைகளுக்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு "இலங்கையின் பிரசையாக உள்ளவருமான எவரேனும் ஆள்" என்பதிலிருந்து அப்பிரிவின் முடிவு வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "இலங்கையின் பிரசையாக உள்ளவருமான எவரேனும் ஆளும் அத்துடன் அத்தகைய ஆளின் விதவையும் பிள்ளைகளும், இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதற்கமைய இச்சட்டத்தின் கீழான ஓய்வூதியமொன்றைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கம் செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(2) சட்டமன்றின் உறுப்பினர் ஒருவராகத் தமது சேவைக்காலப்பகுதியின்போது, கூட்டுமொத்தமாக ஆகக்குறைந்தது ஐந்தாண்டு காலப்பகுதியொன்றுக்கு இச்சட்டத்தின் அட்டவணையில் தரப்பட்டுள்ள பதவிகளுள்

2—டீ 0069729—1,180 (90/06)

ஏதேனுமொன்றையோ அல்லது அதற்கு மேற்பட்ட பதவிகளையோ வகித்திருக்கும் ஆளெவரும்—

(அ) எத்தகைய பதவியை அல்லது பதவிகளை வகிப்பவர்களுக்குக் கொடுபடற்பாலனவான சம்பளங்கள் சமனானவையோ, அத்தகைய ஒரு பதவியை அல்லது அதற்கு மேற்பட்ட பதவிகளையோ அவர் வகித்திருந்தால், அத்தகைய பதவியை வகிப்பவருக்குத் தற்சமயம் கொடுபடற்பாலதான அடிப்படைச் சம்பளத்தின் மூன்றிலொரு தொகையுள்ள மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்; அல்லது

(ஆ) அவர் அத்தகைய ஒன்றுக்கு மேற்பட்ட பதவியை வகித்திருந்து, அத்துடன் அத்தகைய ஒரு பதவியை வகிப்பவருக்குக் கொடுபடற்பாலதான சம்பளமானது அத்தகைய வேறு பதவியை வகிக்கின்றவருக்கு அல்லது வகிக்கின்றவர்களுக்குக் கொடுபடற்பாலதான சம்பளத்தைவிட அதிகமானதாக இருந்தால், மிக அதிகமாகக் கொடுக்கப்படும் அத்தகைய பதவிகளை வகிப்பவருக்குத் தற்சமயம் கொடுபடற்பாலதான அடிப்படைச் சம்பளத்தின் மூன்றிலொரு தொகையுள்ள மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்; அத்துடன்,

அவர் அத்தகைய பதவிகளில் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றைப் பதினைந்து ஆண்டுகளுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு வகித்திருந்தால், அத்தகைய அடிப்படைச் சம்பளத்தின் மூன்றிலொரு ஆகக்கூடிய தொகையொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்:

ஆயின், சட்டமன்றின் உறுப்பினர் ஒருவராகத் தமது சேவைக்காலப் பகுதியின்போது ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆனால் பதினைந்து ஆண்டுகளுக்குக் குறைந்த காலப்பகுதி ஒன்றுக்கு இச்சட்டத்தின் அட்டவணையில் தரப்பட்டுள்ள பதவிகளில் ஏதேனும் ஒன்றையோ அல்லது அதற்கு மேற்பட்ட பதவிகளையோ வகித்திருக்கும் ஆளெவரும் (பதவி வகிப்பவர்களுக்கு கொடுபடற்பாலதான சம்பளமானது சமமான சம்பளமாக இருக்கும் பதவிகள்) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் சபாநாயகரினால் தயாரிக்கப்படும் கொடுப்பனவுகள் அட்டவணை ஒன்றிற்கிணங்கத் தீர்மானிக்கப்படும் மாதாந்த விகிதாசார ஓய்வூதியமொன்றைப் பெறுதல் வேண்டும்.".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு "பெற்றுக் கொண்டிருக்கின்றவரும், சட்டமன்ற உறுப்பினரொருவரின் விதவையாக இருப்பதன் பயனைக்கொண்டு அத்தகைய ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்கின்றவர் அல்லாதவருமான" என்ற சொற்களுக்குப் பதிலாக, "பெற்றுக் கொண்டிருக்கின்றவரும், சட்டமன்ற உறுப்பினரொருவரின் விதவையாக அல்லது பிள்ளையாக இருப்பதன் பயனைக்கொண்டு அத்தகைய ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்கின்றவரல்லாதவருமான" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7அ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7அ என்னும் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

"சட்டமன்ற உறுப்பினர்களின் விதவைகளுக்கும் பிள்ளைகளுக்கும் ஓய்வூதியக் கொடுப்பனவு

7அ. (1) இச்சட்டத்தின் கீழ் ஓய்வூதியமொன்றுக்கு உரித்தாகுகின்ற சட்டமன்ற உறுப்பினர் ஒருவரின் இறப்பின் மீது, அத்தகைய உறுப்பினரின் விதவையானவர் அல்லது, அத்தகைய உறுப்பினரின் வாழ்க்கைத் துணை அவருக்கு முன்னரே இறந்திருக்குமிடத்து, அத்தகைய உறுப்பினரின் பிள்ளைகள், அத்தகைய ஓய்வூதியத்தைப் பெறுதல் வேண்டும். அத்தகைய ஓய்வூதியமானது, அத்தகைய உறுப்பினருக்கு, அவர் இறந்தபோது ஓய்வூதியமாகக் கொடுக்கற்பாலதான தொகைக்குச் சமமான தொகையொன்றாதல் வேண்டும்.

(2) சட்டமன்றின் உறுப்பினர் ஒருவரின் பிள்ளைகளுக்கு (1) ஆம் உட்பிரிவின் கீழ் கொடுபடற்பாலதான ஓய்வூதியமானது—

(அ) அத்தகைய ஓய்வூதியத்திற்கு அத்தகைய உறுப்பினரின் ஒரே ஒரு பிள்ளை மாத்திரம் தான் உரித்துடையவராக இருந்தால், அத்தகைய பிள்ளைக்கு அவ்வோய்வூதியமானது முழுமையாகக் கொடுக்கப்படல் வேண்டும்;

(ஆ) அத்தகைய ஓய்வூதியத்திற்கு அத்தகைய உறுப்பினரின் பிள்ளைகளில் ஒன்றுக்கு மேற்பட்டோர் உரித்துடையவர்களாக இருந்தால் ஓய்வூதியம் ஆனது அவர்களுக்கு இடையில் சம பங்குகளாகப் பிரித்துக் கொடுக்கப்படல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, கூட்டு மொத்தமாக ஐந்து ஆண்டுகளுக்குக் குறைவான காலப்பகுதி ஒன்றுக்குச் சட்டமன்றின், உறுப்பினர் ஒருவராகச் சேவையாற்றிய ஆள் எவரினதும் இறப்பானது, சட்டத்துறைத் தலைமை அதிபதிக்கு கொடுத்துவப்பட்ட தகவலின் மேல் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான செயல் ஒன்றினால் ஏற்பட்டதென்றும், இச்செயல் அவருடைய அபிப்பிராயத்தில் தவறு ஒன்றாக அமையும் என அவரினால் உறுதிப்படுத்தப்பட்டதன் மேலும், அவ்வுறுப்பினர் எவரும், ஆகக் குறைந்தது ஐந்தாண்டு காலப்பகுதி ஒன்றுக்குச் சட்டமன்றின் உறுப்பினர் ஒருவராகச் சேவையாற்றியுள்ளாரெனக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், அவர், அவரின் இறப்பின்போது இச்சட்டத்தின் கீழான ஓய்வூதியமொன்றுக்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் கீழ்—

(அ) சட்டமன்றின் உறுப்பினர் ஒருவரின் விதவைக்கு அல்லது வாழ்க்கைத் துணைக்குக் கொடுபடற்பாலதான ஓய்வூதியமானது, அத்தகைய விதவை அல்லது வாழ்க்கைத் துணை இறந்ததன் மேல் அல்லது மறு விவாகம் செய்ததன் மேல், இவற்றில் எது முந்தி நிகழ்கின்றதோ, அப்போது இல்லாதொழிதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) சட்டமன்றின் உறுப்பினர் ஒருவரின் பிள்ளைக்குக் கொடுபடற்பாலதான ஓய்வூதியமானது, அத்தகைய பிள்ளை இருபத்தொரு வயதை எய்தியதன் மேல் அல்லது அவர் திருமணம் செய்து கொண்டதன் மேல், இவற்றில் எது முந்தி நிகழ்கின்றதோ, அப்போது இல்லாதொழிதல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் கீழ் ஓய்வூதியமொன்றுக்கு உரித்துடையவரான சட்டமன்று உறுப்பினரொருவரின் விதவை அல்லது வாழ்க்கைத்துணை இறப்பதன் மீது அல்லது மறுவிவாகம் செய்துகொள்வதன் மீது, அத்தகைய உறுப்பினரின் பிள்ளைகள், அத்தகைய விதவைக்கு அல்லது வாழ்க்கைத் துணைக்கு, அவர் இறக்கின்ற அல்லது மறு விவாகம் செய்கின்ற நேரத்தில் இச்சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான ஓய்வூதியத் தொகைக்குச் சமமான ஒரு தொகையைக் கொண்ட ஓய்வூதியமொன்றைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாதல் வேண்டும். இவ்வுட்பிரிவின் கீழ் சட்டமன்ற உறுப்பினரொருவரின் பிள்ளைகளுக்குச் செலுத்தப்படற்பாலதான ஓய்வூதியமானது —

(அ) அத்தகைய உறுப்பினரின் ஒரு பிள்ளை மட்டுமே அத்தகைய ஓய்வூதியத்திற்கு உரித்துடையவராக இருப்பின் அத்தகைய பிள்ளைக்கு முழுமையாகச் செலுத்தப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய உறுப்பினரின் ஒன்றுக்குமேற்பட்ட பிள்ளைகள் அத்தகைய ஓய்வூதியத்திற்கு உரித்துடையவராயிருப்பின், அவர்களிடையே சம பங்குகளாகப் பிரிக்கப்படுதல் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய (5) ஆம் உட்பிரிவின் கீழ் சட்டமன்ற உறுப்பினர் ஒருவரின் பிள்ளைக்குச் செலுத்தப்படற்பாலதான ஓய்வூதியம்,

அத்தகைய பிள்ளை இருபத்தொரு வயதினை எய்துதல் அல்லது திருமணம் செய்தல் ஆகிய இரண்டில் எது முன்னர் இடம் பெறுகிறதோ அதன்மேல் இல்லாதொழிதல் வேண்டும்.

(7) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் எது எப்படியிருப்பினும், (1) ஆம் அல்லது (5) ஆம் உட்பிரிவின் கீழ் ஓய்வூதியமொன்றைப் பெறுவதற்கு உரித்துடையவரான ஒரு பிள்ளை அவரின் வாழ்க்கைக்குரிய சம்பாத்தியத்தினைத் தேட இயலாத வகையில் அப்பிள்ளையை ஆக்குகின்றவாறான அத்தகைய உடல் அல்லது உள இயலாமையினால் துன்பப்படுகின்றாரெனச் சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் நியமிக்கப்பட்ட மூன்று மருத்துவ அலுவலர்களைக் கொண்ட மருத்துவ சபையொன்று தீர்மானிக்குமிடத்து, அத்தகைய பிள்ளை ஆனது, (1) ஆம் அல்லது (5) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட முறையில் கணக்கிடப்படும் அத்தகைய ஓய்வூதியத்தை அவரது வாழ்நாளின்போது பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(8) சட்டமன்ற உறுப்பினர் ஒருவரால் சட்டரீதி மகவேற்பு செய்யப்பட்ட பிள்ளையொன்று, இச்சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்குமாக அவ்வுறுப்பினரின் ஒரு பிள்ளை என்றவாறு கருதப்படல் வேண்டுமென, சந்தேகத்தைத் தவிர்ப்பதற்காக, இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு "சட்டமன்ற உறுப்பினர்" என்பதன் வரைவிலக்கணத்தின் (உ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது : முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(உ) 1978 ஆம் ஆண்டின் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தாபிக்கப்பட்ட பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவராகத் தெரிவு செய்யப்பட்டவர் என்பதுடன் அவ்வரசியலமைப்பின் 99அ என்னும் உறுப்புரையின் கீழ் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினரையும் உள்ளடக்கும்; அத்துடன்".

இச் சட்டம் தொடங்கும் தேதியன்று விதவை இறந்துள்ள விடத்து அல்லது மறு விவாகம் செய்துள்ள விடத்து பிள்ளைகளுக் கான ஓய் வூதியக் கொடுப்பனவு.

9. (1) முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் ஓய்வூதியமொன்றைப் பெற்றுவந்தவரான சட்டமன்ற உறுப்பினர் ஒருவரின் விதவை இச்சட்டம் தொடங்கும் தேதியன்று இறந்துள்ளவிடத்து அல்லது மறு விவாகம் செய்துள்ளவிடத்து, அப்போது அத்தகைய உறுப்பினரின் எவரேனும் பிள்ளை, அத்தகைய தேதியிலிருந்து அத்தகைய விதவைக்கு அவர் இறந்த நேரத்தில் அல்லது மறு விவாகம் செய்த நேரத்தில் கொடுப்பனவு செய்யப்பட்ட ஓய்வூதியத்துக்குச் சமமான தொகையொன்றின் ஓய்வூதியமொன்றைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும். சட்டமன்ற உறுப்பினர் ஒருவரின் பிள்ளைகளுக்கு இப்பிரிவின் கீழ் செலுத்தப்படற்பாலதான பணத்தொகை ஆனது—

(அ) அத்தகைய உறுப்பினரின் ஒரு பிள்ளை மட்டுமே அத்தகைய ஓய்வூதியத்துக்கு உரித்துடையவராயின், அது முழுவதும் அத்தகைய பிள்ளைக்குக் கொடுபடுதல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய உறுப்பினரின் ஒரு பிள்ளைக்கு மேற்பட்டவர்கள் அத்தகைய ஓய்வூதியத்துக்கு உரித்துடையவர்களாயின், அவர்களிடையே சம பங்குகளாகப் பிரிக்கப்படல் வேண்டும்.

(2) முதன்மைச் சட்டவாக்கத்தின் 7அ என்னும் பிரிவின் (5) ஆம், (6) ஆம், (7) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், இப்பிரிவின் கீழ் கொடுபடற்பாலதான ஓய்வூதியமொன்றுக்கும் அதன் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் அவர் உறுப்பினர் ஒருவராக இருந்து, முதன்மைச் சட்டவாக்கம் நடைமுறைக்கு வந்தபோது அவர் உயிருடன் இருந்திருந்தால் முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் ஓய்வூதியமொன்று பெறுவதற்கு உரித்துடையவராக இருந்திருப்பாரோ, அத்துடன் எவ்வுறுப்பினரின் விதவை, 1982 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் தேதி, அவர் உயிருடன் இருந்திப்பாராளுல் முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழான ஓய்வூதியமொன்றைப் பெறுவதற்கு உரித்துடையவராக இருந்திருப்பாரோ அவ்வுறுப்பினர் ஒருவரின் பிள்ளை இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் அத்தகைய உறுப்பினருக்குச் செலுத்தப்பட்டிருந்திருக்கக்கூடிய ஓய்வூதியத்திற்குச் சமனான ஓய்வூதியமொன்றைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும். முதன்மைச் சட்டவாக்கத்தின் 7அ என்னும் பிரிவின் (5) ஆம், (6), ஆம் (7) ஆம் அத்துடன் (8) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், இவ்வுட்பிரிவின் கீழ் கொடுபடற்பாலதான ஓய்வூதியத்திற்கும், அது தொடர்பிலும், ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

ஒவ்வாமை உள்ளவிடத்து சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

10. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஒவ்வாமை ஏதேனுமிருக்கும் சந்தர்ப்பத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.